NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2019

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours | 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 6 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers must be in TAMIL.
5. It is in your own interest to write legibly and to present your work neatly.

---

IEB Copyright © 2019

## SECTION A

## QUESTION 1 பகுதி ஒன்று

ஐந்து தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

1.1 சில அழகான பறவைகள்

1.2 நமது நாடு

1.3 விவசாயம் - FARMING

1.4 எனக்குப் பிடிக்கும் காட்டு விலங்குகள்

1.5 என் குடும்பம் மிகவும் அழகானது

**30 marks**

IEB Copyright © 2019

## SECTION B

## QUESTION 2 பகுதி இரண்டு

ஏதேனும் மூன்று கேள்விகளுக்கு மட்டும் பதில் எழுதுக

2.1 நீ புதிதாக வாழ்கின்ற ஊரைப் பற்றி (New Town) உன் தோழனுக்கு/தோழிக்குக் கடிதம் எழுதுக (10)

2.2 SMS: என் குடும்பத்தினர் இந்தியாவுக்குப் போனார்கள்.
வணக்கம், நலமா?
உன்னிடம் சில நாட்கள் தங்க முடியுமா?
நன்றி வணக்கம்
நான் தனியாக இருக்கிறேன் (10)

2.3 புதிதாகத் திறக்கப்படும் மளிகைக் கடையில் (Grocery Shop) நீ வேலை பார்க்கிறாய். இக்கடைக்கு விளமபரம் (Advert) ஒன்று தயாரித்துக் கொள்ளவும். மளிகைக் கடையில் விற்கப்படும் ஏழு (7) பொருட்களின் படங்களை வரைந்து பெயர்களையும் விளம்பரத்தில் எழுதுக (10)

2.4 சுருக்கி எழுதுக (சுமார் 12–15 சொற்கள்)

ஏழை ஒருவன் கடுமையான வெயிலில் பாலைவனம் வழியாக நடந்து சென்று கொண்டிருந்தான். அவன் காலில் செருப்பு இல்லை. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் வெயில் கொடுமை தாங்காமல் துடித்தான் அவன். அந்த வழியாகச் செல்வந்தன் ஒருவன் குதிரையில் வந்தான். அவன் காலில் விலை உயர்ந்த செருப்பு இருந்தது. அவன் ஏறி வந்த குதிரையும் கொழுகொழு வென்று இருந்தது. அவனை நிறுத்திய ஏழை, "ஐயா! என் பரிதாபமான நிலையைப் பாருங்கள். இன்னும் சிறிது தொலைவு நடந்தால் வெயில் கொடுமை தாங்காமல் சுருண்டு விழுந்து விடுவேன். தாங்கள் காலில் அணிந்து இருக்கும் செருப்பை எனக்குத் தாருங்கள் என் மீது இரக்கம் காட்டுங்கள்" என்று கெஞ்சினான். (10)

*[பேராசிரியர். முனைவர் மு.பொன்னவைக்கோ]*

**30 marks**

IEB Copyright © 2019

## SECTION C

## QUESTION 3 பகுதி மூன்று

3.1 கீழ்வரும் பகுதியைப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக:

ஒரு நாள், இந்த நிலை மாற ஏதேனும் செய்தாக வேண்டும் என்று ஊர் மக்கள் அனைவரும் கூடி ஒரு முடிவெடுத்தனர். நாம் இயற்கைத் தெய்வங்களைச் சரியாக வழிபடவில்லை, அதனால் தான் மழை பொய்த்தது; இந்த வறட்சியும் ஏற்பட்டுள்ளது என்று கருதினர். எனவே ஊர் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு, ஊரின் கிழக்குத் திசையில் உள்ள பரந்த நிலப்பரப்பிற்குச் சென்று இயற்கைத் தெய்வங்களான "பஞ்ச பூதங்களுக்கும்" சிறப்புப் பூசை செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தனர். அவ்வாறு நாம் அனைவரும் கூடி கூட்டு வழிபாடு செய்தால் மழை வரும் என்பது நம் முன்னோர்கள் நமக்குக் கூறிச் சென்ற ஒரு நம்பிக்கை. எனவே நாம் அனைவரும் நாளை ஒன்று கூடி, கிழக்குத் திசையில் உள்ள நிலப்பரப்பிற்குச் சென்று, சிறப்புப் பூசையைச் செய்ய வேண்டு என்று ஊர்த்தலைவர் கூறிச் சென்றார். அதனால் ஊர் மக்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் பூசைக்கான ஏற்பாடுகளைச் செய்யத் துவங்கினர்.

3.1.1 மூன்று (3) பெயர்ச்சொல் வகைகளை எழுதுக (3)

3.1.2 மேற்காணும் பகுதியிலிருந்து மூன்று (3) பெயர்சொற்களைத் தருக (3)

3.1.3 இரண்டு சுட்டு எழுத்துக்களை எழுதுக (1)

3.1.4 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு (2) வினைச்சொற்களை எழுதுக (2)

3.2 ஒருமைக்குப் பன்மை எழுதுக:
எ.கா: பறவை - பறவைகள்

3.2.1 நாம் (1)

3.2.2 தலைவன் (1)

3.2.3 நாள் (1)

3.2.4 பெயர்ச்சொல் (1)

3.2.5 தெய்வம் (1)

IEB Copyright © 2019

3.3 எதிர்ச்சொற்கள் ஏழுதுக:

எ.கா: மேல் - கீழ்

3.3.1 மேற்கு (1)

3.3.2 வெளியே (1)

3.3.3 வாருங்கள் (1)

3.3.4 பின் (1)

3.4 ஆண்பாலுக்கு பெண்பால் தருக:

எ.கா: அவன் - அவள்

3.4.1 தலைவன் (1)

3.4.2 மகன் (1)

3.4.3 சகோதரன் (1)

3.4.4 பூக்காரன் (1)

3.5 சேர்த்து எழுதுக:

3.5.1 பூசையை + செய்ய (1)

3.5.2 கோல் + ஆட்டம் (1)

3.5.3 பொன் + ஒளி (1)

3.5.4 முடிவு + எடுத்தனர் (1)

3.6 ஆங்கிலப் பொருள் தருக:

3.6.1 மழை (1)

3.6.2 ஊரில் (1)

3.6.3 பூசை (1)

3.6.4 மக்கள் (1)

3.6.5 தலைவர் (1)

3.7 சரியாக எழுதுக:

3.7.1 அவன் <u>பள்ளி</u> போனான் (1)

3.7.2 அம்மா <u>கோவில்</u> வந்தார் (1)

3.7.3 சூரியா <u>அவள்</u> பார்த்தான் (1)

3.7.4 அவர்கள் <u>புலி</u> பிடித்தார்கள் (1)

3.8 பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக
(Choose the correct word from the brackets.)

3.8.1 பாட்டி வாழை ____________ வாங்கினார் (பழம், பலம்) (1)

3.8.2 பசு ____________ தரும் (பாள், பால்) (1)

3.9 இறந்த காலத்தில் எழுதுக
எ.கா: அவள் போ - அவள் போனாள்

3.9.1 அவன் சந்தைக்கு வா (1)

3.9.2 அவர் பள்ளிக்குச் செல்கிறார். (1)

3.10 கீழ்வரும் நான்கு சொற்களில் எந்தச் சொல் பொருத்தமானது அல்ல?
(வீடு மரம் பள்ளி கோவில்) (1)

**40 marks**

**Total: 100 marks**

IEB Copyright © 2019